விடுதியிலேயே அவதிப்படுவது அரசுக்குத் தெரியுமா? இனிமேலாவது உடனடியாக அதைக் கவனிப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் கட்டிடங்களில் இயங்கி வருகின்ற அந்த விடுதிக் கட்டிடங்கள் சரியாக, வசதியாக இல்லை என்று உறுப்பினர் அவர்கள் சொல்லுகிறார்கள். நம்முடைய நலத்துறை இயக்குநர் அனுப்பியுள்ள குறிப்புகளின் அடிப்படையில் பார்க்கும் போது, தற்போது, அங்கே இருக்கக்கூடிய கட்டிடங்கள் வசதியான, தனித்தனியான கட்டிடங்களாக இருக்கின்றன என்பது தெரிய வருகிறது. இருந்தாலும். உறுப்பினர் அவர்களின் கருத்தின் அடிப்படையில், ஆதிதிராவிடர் நலத்துறை இயக்குநரை நேரடியாக அங்கே அனுப்பி, தகுதியான வேறு ஒரு கட்டிடத்தைத் தேர்வு செய்து, உடனடியாக அந்த மாணவிகளை அந்த விடுதியில் தங்கவைப்பதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வடாற்காடு மாவட்டத்தில் செயல்படுத்தப்படவுள்ள மலைவாழ் மக்களுக்கான மேம்பாட்டு திட்டங்கள்.

32—(*வினா எண் 17266)—திரு. ப. சுந்தரம்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் வடாற்காடு மாவட்டம் ஏலகிரிமலை ஜவ்வாது மலைப் பகுதிகளில் எந்தெந்த திட்டங்கள் செயல்படுத்த அரசு திட்டமிடப் பட்டுள்ளது?

(ஆ) அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: (அ) மற்றும் (ஆ): விவர அறிக்கையொன்று** அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. ப. சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஒரு தொழிற்பேட்டையை ஆரம்பிப்பதாகச் சொல்லப்படுகிறது. ஏற்கெனவே மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அது எப்போது அங்கே ஆரம்பிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற்பேட்டை ஆரம்பிப்பதாக உறுப்பினர் அவர்கள் சொல்லுகிறார்கள். அதுபற்றிய குறிப்புகள் தற்போது என்னிடத்திலே இல்லை. தனியாக கேள்வி கேட்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**155—156ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

[1984 பிப்ரவரி 15

திரு பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே கொடுக்கப்பட்டுள்ள குறிப்பிலேயே, மருந்தகங்கள் ஆரம்பிப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஏற்கனவே இப்படிப்பட்ட மருந்தகங்கள் ஜவ்வாது, ஏலகிரி மலைப் பகுதிகளிலே இருந்தும், அவைகள் பல்வேறு கிராமங்களில் பயன் படவில்லை சாலரா போன்ற தொத்து வியாதிகள் வருகின்ற போது, கீழே இருக்கின்ற ஆரம்ப சுகாதார நிலைய அதிகாரிகள் தான் மேலே சென்று தடுப்பு ஊசி போடுகின்ற நிலை இருக்கின்றது. அதைப்போக்க, அந்த மலைப்பகுதிகளிலேயே ஆரம்ப சுகாதார நிலையங்களை வைக்க வேண்டுமென்ற தேவையை வற்புறுத்தி வருகிறோம். அதை ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றி அரசு தனியாகப் பரிசீலனை செய்யும்.

திரு. ந. குலசேகரபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாணியம்பாடி தொகுதியை உள்ளடக்கிய ஜவ்வாது மலைப் பகுதியில், காவனூரில் ஒரு கால்நடை மருந்தகத்தை அமைக்க வேண்டுமென்ற கோரிக்கை நீண்ட நாட்களாக இருந்து வருகிறது. அதை இந்த விவரக் குறிப்பில் குறிப்பிடவில்லை. அங்கே ஒரு கால்நடை மருந்தகத்தை அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே எடுக்கப்பட்டிருக்கிற நடவடிக்கை களைப் பற்றித்தான் இந்த விவரக் குறிப்பிலே நாம் வைத்திருக் கிறோம். அங்கே ஒரு கோரிக்கை இருப்பதாக உறுப்பினர் அவர்கள் சொல்லுகிறார்கள். அந்தக் கோரிக்கையை அவர்கள் என்னிடத்தில் சொன்னால், அரசு தனியாக பரிசீலனை செய்யும்.

தமிழகத்தில் பெண்களுக்கென தனியாக இயங்கிடும் அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்கள்.

33—(*வினா எண் 17857)—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநிலத்தில் பெண்களுக்கான I.T.I. பள்ளிகள் எத்தனை இருக்கின்றன மாவட்டவாரியாக?

(ஆ) ஒவ்வொரு மாவட்டத்திலும் பெண்களுக்காக I.T.I. பள்ளிகளை ஆரம்பிக்கும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) தமிழகத்தில் பெண்களுக்கென தனியாக மூன்று அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்கள் முறையே சென்னை தியாகராயநகரிலும்,